1975 நவம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, சட்டமன்றம் (தகுதியின்மையைத் தவிர்த்தல்), திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 49/75) சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(5) அரசினர் தனித் தீர்மானம்

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும் தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை ஏற்க அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

"தமிழ்நாட்டிலிருந்து பெருமளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகின்ற, வேலை நிறைவுபெற்ற, ஓரளவு வேலை நிறைவு பெற்ற தோல்களின் அளவு, அனைத்து இந்தியாவிலும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற தோல்களின் அளவில் 85 சதவிகிதம் ஆகும் என்பதாலும்,

தமிழ்நாட்டில் தோல் தயாரிக்கும் தொழிலில், சமுதாயத்தில் நலிந்த பிரிவினரைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் தொழிலாளர் களாக நியமிக்கப்பட்டுள்ளபடியாலும்,

எனவே இப்போது—

(1) இந்திய அரசு அமைக்கக் கருதியுள்ள தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தைச் சென்னையிலேயே அமைத்திட வேண்டும் என்றும்,

(2) சென்னையில் தற்போதுள்ள தோல் ஏற்றுமதி மேம் பாட்டு மன்றம் வேலை நிறைவுபெற்ற தோல்களின் ஏற்றுமதி மேம் பாடு குறித்த கூடுதல் பொறுப்பினையும் ஏற்றுத் தொடர்ந்து செயல்பட அனுமதிக்க வேண்டுமென்றும்,

இந்திய அரசைக் கேட்டுக்கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது"

என்ற இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : This resolution may be taken up later because we have given some amendments to the resolution.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தை மூவ் செய்யுங்கள். திருத்தம் எல்லோருக்கும் சப்ளையாகிவிட்டது.

THIRU K. T. K. TANGAMANI : Is this resolution going to be passed without any discussion? This is an official resolution and also an important resolution. There are various implications.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ள லாம் என்றால் சொல்லுங்கள்.

THIRU K. T. K. TANGAMANI : Sir, I move the following amendment :

"In para 2, for item (ii), *substitute* the following :

"(ii) to allow the Leather Export Promotion Council to continue to function in Madras."

The amendment was duly seconded.

1975 நவம்பர் 7]

THIRU K. T. K. TANGAMANI : This may be taken up on the next official day.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானல், அடுத்த செஷன் வந்தால் தான்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அடுத்த அபிஷியல் டே திங்கட் கிழமை, அன்று இதை முடித்துவிட்டு, மற்றவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

DR. H. V. HANDE : I am interested in it.
என்னுடைய தொகுதியில் அந்தத் தொழிலாளர்கள் பல பேர் இருக்கிருர்கள். personally I am also interested in it. Voters are also involved.

ஆதலால் ஒரு ரிக்குவஸ்ட். எப்படியிருந்தாலும் ஆதரிக்கப் போகிறேம். ஆகவே 15 நிமிடம் நீடித்தால் இன்றைக்கே முடித்து விடலாம். திரு. தங்கமணி அவர்களின் கருத்தைக் கேட்ட பிறகு, மற்ற கருத்துக்களையும் இரண்டொரு நிமிடங்கள் கேட்டு இன்றே முடித்து விடலாம். 15 நிமிடம் நீடித்தால் போதும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We have given amendments. It is an important resolution.

இரண்டொரு நிமிடங்கள் நாங்கள் பேசத் தயாராக இல்லை. ஆகவே திங்கட்கிழமை வைத்துக்கொள்ளுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, எனக்கு இருக்கிற டிபிக்கல்டீஸைச் சொல்லுகிறேன். இந்தத் தொடரில் இதை முடிக்காமல் போனல், தொகுதியில் இருப்பவர்கள் கேட்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நாளைக்கு முதல் சப்ஜெக்டாக எடுத்து முடித்துவிடலாம்.

THIRU K. T. K. TANGAMANI : We cannot make the rules in any way we like. There is a non-official day. Now the non-official day will be converted as partially official and partially non-official, if it is to be taken up on Saturday, i.e. tomorrow which

is a non-official day. This may be taken up as the first thing on Monday and finished within half an hour and then the discussion on the Electricity Board Budget may be taken up. Let us respect the procedure which we have laid down.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு என்றால், அதற்கு என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றினால் சரியாகப் போய்விடும். திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம் என்பதால், திங்கட்கிழமையே வைத்துக் கொள்வோம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.37 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

215. Notification issued in G.O. Ms. No. 2719, Home, dated the 27th November 1974, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 in the Tamil Nadu Cinematograph Manual. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

216. Notification issued in G.O. Ms. No. 632, Home, dated the 16th April 1975, in regard to amendments to the rules under the Tamil Nadu Borstal School Act, 1925. [Laid on the table of the House under section 4(4) of the Tamil Nadu Borstal Schools Act, 1925 (Tamil Nadu Act V of 1925).]

217. Notification issued in G.O. Ms. No. 526, Commercial Taxes and Religious Endowments, dated the 31st October 1974 in regard to exemption from sales tax on the sales of machinery Hospital equipments, appliances and tools to the Society for the Aid of Handicapped children, Mettupalayam Road, Coimbatore for a period of one year commencing from the 31st October 1974. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]